
# புரட்சிக் கவியின் புகழ் வாழ்க!



நீந்தும் கப்பல் மூழ்கி விடாமல்
 நிறுத்தும் நங்கூரம்! அந்த
நெடிய வெற்பையும் இடித்திடும் தோள்கள்!
 நிமிர்ந்த கம்பீரம்!
பூந்தமி ழுக்குத் தீங்கொன்று வந்தால்
 பொங்கிடும் வெங்கோபம்! மொழிப்
போருக்குத் தீட்டிய வரிகள் அனைத்தும்
 பூபாளச் சங்கீதம்!

தமிழுக்கும் அமுதென்று பேர்என்று கூவினான்!
 தடந்தோள் உரமூட்டி! அவன்
தாலாட்டுப் பாட்டிலும் எழுப்பிவிட் டான்!நமைத்
 தன்மான உணர்வேற்றி!
சிமிழுக்குள் கிடந்த தமிழுக்குத் தந்தான்
 சிறகுகள்! ஒளிகூட்டி! எட்டுத்
திசைகளும் தமிழை வணங்கவைத் தான்!மலைச்
 சிகரத்தில் கொடிநாட்டி!

கொஞ்சும் அழகின் சிரிப்பால் இன்பம்
 கொடுத்தான் துயர்மாற்றி! சுடர்
கொளுத்தி மகிழ்ந்தான் இருண்ட வீட்டிலே
 குடும்ப விளக்கேற்றி!
தஞ்சம் வந்தமொழி தமிழை ஆளவோ?
 தடுத்தான் இடர்வீழ்த்தி! இளந்
தமிழச்சி கையில் கத்தி கொடுத்தான்
 தாய்த்த்தமிழ் நிலம்வாழ்த்தி!

கழுத்துப் பிடரி சிலிர்க்க எழுந்தான்
 கண்களில் அனல்தேக்கி! இங்குக்
கால்வைத் திடுமோ இந்தி?என்று ஆர்த்தான்
 களத்தில் பகைநோக்கி!
எழுத்து வடிவில் நெருப்பை உமிழ்ந்தான்
 எரிமலை உண்டாக்கி! அவன்
எடுத்துப் பிடித்தது எழுதுகோல் அல்ல!
 எந்திரத் துப்பாக்கி!

மைந்தர்களே, தமிழ் அன்னையைக் காக்க
 வருகெனக் குரல்கொடுத்தான்! இங்கு
மானுடச் சமுத்திரம் நான்என்று கூவும்
 மகத்துவம் அவன்படைத்தான்!
பைந்தமிழ் எங்கள் உயிர்என்று கூறிப்
 பாட்டில் முரசொலித்தான்! தமிழ்ப்
படைமறம் காட்டிப் பகைவரை வெல்லப்
 பாண்டியன் பரிசளித்தான்!

வீரத் தமிழ்க்கவி இன்றிருந் தால், புது
 வீறுடன் நின்றிருப்பான்! தமிழ்
வெற்றி மாலையை முதல்வர்க்குச் சூட்ட
 விரும்பிச் சென்றிருப்பான்!
பேரன் "தளபதி" ஆட்சியின் மாட்சிப்
 பெருமையைக் கண்டிருப்பான்! உயர்
பீடு மிகும்தமிழ் நாடும் இதுவெனப்
 பெருமிதம் கொண்டிருப்பான்!

அதிர்வலை தந்த எழுச்சிக் கவிஞன்!
 அவன்தன் தாள்வாழ்க! அவன்
அள்ளிப் பொழிந்த அருவி நிகர்த்த
 அமுதத் தமிழ்வாழ்க!
புதுவைப் புலவன் காணா விழைந்த
 புதுமைப் புவிவாழ்க! புகழ்
போற்றிக் கூடுவோம்! ஏற்றிப் பாடுவோம்!
புரட்சிக் கவி வாழ்க!



**கவிச்சுடர்**
**கவிதைப் பித்தன்**

## வனத்துறையின் தொடர் முயற்சியால் – நீலகிரி காட்டுத் தீ கட்டுப்படுத்தப்பட்டது!

நீலகிரி, மே.1-

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை தொடர்ச்சியான முயற்சிகளின் விளைவாக, நீலகிரி காட்டுத்தீ முழுவதுமாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

நீலகிரி மாவட்டம் இந்த ஆண்டு பல காரணங்களால் மிகக் கடினமான காட்டுத்தீ காலத்தை எதிர்கொள்கிறது. இந்த நிலையில் வென்லாக் டவுன்ஸ் காப்புக் காட்டில் ஏற்பட்ட காட்டுத்தீ மிக வேகமாக பரவியது. அதிக வெப்ப நிலை, குறைந்த ஈரப்பதம் மற்றும் பலத்த காற்று ஆகியவை இணைந்து உலர்ந்த தாவரங்களை எளிதில் எரியக் கூடிய எரிபொருளாக மாற்றி தீயின் தீவிரத்தைக் அதிகரித்தன.

அதிக வெப்பம் மற்றும் குறைந்த ஈரப்பதம் காரணமாக உலர்தன்மை அதிகரித்து தீ எளிதில் பற்றிக்கொண்டு வேகமாக பரவியது மேலும் பலத்த காற்று தீக்கனல்களை முன்புறம் கொண்டு சென்று தீ பரவலை அதிகரித்தது. நீலகிரியின் மலைப்பாங்கான நில அமைப்பும் தீயணைப்பு பணிகளில் சவால்களை ஏற்படுத்தியது. சரிவுகள் மற்றும் கணிக்க முடியாத காற்று திசைகள் தீ கட்டுப்பாட்டை கடினமாக்கின.

15.04.2026 அன்று பார்சன்ஸ் வேலி சரகத்தின் வென்லாக் டவுன்ஸ் காப்புக் காட்டில் காட்டுத்தீ ஏற்பட்டதாக தகவல் கிடைத்ததும் உள்ளூர் வனத்துறை குழுக்கள் உடனடியாக பணியில் ஈடுபட்டன. மாநிலம் முழுவதும் இருந்து 500-க்கும் மேற்பட்ட வனத்துறை பணியாளர்கள் மற்றும் 6 மாவட்ட வன அலுவலர்கள் இணைந்து தீயை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தனர். மேலும் 7 மாநில வனத்துறை தீயணைப்பு வாகனங்கள் முக்கிய இடங்களில் நிலைநிறுத்தப்பட்டன. தமிழக மாநில பேரிடர் மீட்பு படையிலிருந்து 60 பேர் கொண்ட இரு அணிகள் மற்றும் தீயணைப்பு துறையினரும் பணியில் ஈடுபட்டனர். மேலும் 100க்கும் மேற்பட்ட உள்ளூர் சூழல் மேம்பாட்டு குழு உறுப்பினர்கள் உதவி செய்தனர். தீ மிகுந்த தீவிரம் கொண்டிருந்ததால் வான்வழி உதவி கோரப்பட்டது.

நிலைமைக்கிணங்க மாவட்ட வன அலுவலர் கோரிக்கையின் பேரில் மாவட்ட ஆட்சியர் மாநில பேரிடர் மேலாண்மை அமைப்பின் மூலம் ஹெலிகாப்டர் உதவியை கோரினார். சூலூரிலிருந்து 25.04.2026 அன்று வந்த விமானப்படை குழு ஹெலிகாப்டர் மூலம் தண்ணீர் தெளித்து தீயை கட்டுப்படுத்த உதவியது. பின்னர் வானிலை உகந்ததாக இல்லாததால் ஹெலிகாப்டர் பயன்பாடு நிறுத்தப்பட்டது.

இந்த தீ பெரும்பாலும் தரை மட்டத்தில் பரவிய தீயாகும் செஸ்ட்ரம், யூலெக்ஸ், ஸ்காட்ச் ப்ரூம் மற்றும் உலர்ந்த வாட்டில் போன்ற அந்நிய களைகள் தீ பரவலுக்கு காரணமாக இருந்தன. மனித குடியிருப்புகள் எதுவும் பாதிக்கப்படவில்லை, சோலா காடுகளில் தீ ஏற்படவில்லை. தீ பரவலை கட்டுப்படுத்த தீ தடுப்பு கோடுகள் அமைத்தல், அகழிகள் தோண்டுதல், மோட்டார் பம்புகள் பயன்பாடு, நவீன தீயணைப்பு வாகனங்கள் மற்றும் கைமுறை தீயணைப்பும் பயன்படுத்தப்பட்டன.

மாநில தலைமையகமான சென்னை நகரில் மாநில வனத்தீ கட்டுப்பாட்டு மையம் செயல்படுகிறது. 2022-23 ஆம் ஆண்டில் நபார்டு திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் தகவல் தொழில்நுட்ப வசதிகளுடன் மாவட்ட வனத்தீ கட்டுப்பாட்டு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் உள்ள வென்லாக் டவுன்ஸிலும் இது செயல்படுகிறது. இந்த மையங்கள் 24 மணி நேரமும் தீ எச்சரிக்கைகளை கண்காணித்து உடனடியாக களப் பணியாளர்களுக்கு தகவல்களை வழங்குகின்றன.

மேலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் நவீன தீயணைப்பு வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த தீயணைப்பு பணியில் நீலகிரி வனப்பிரிவில் 7 வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன.

சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர், முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் சிறப்புச் செயலாளர் ஆகியோர் 27.04.2026 அன்று களப் பகுதிகளை ஆய்வு செய்தனர். தற்போது தீ முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் மீண்டும் காட்டுத்தீ பரவாமல் தடுக்க களப்பணியாளர்கள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். தலைமைச் செயலாளர் மற்றும் மூத்த அதிகாரிகளால் நீலகிரி காட்டுத்தீ நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.




தலைமைத் தேர்தல் அதிகாரி / அரசு முதன்மைச் செயலாளர் திருமதி அர்ச்சனா பட்நாயக், நேற்று முன்தினம் (29.04.2026), 2026–தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு, சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற வாக்கு எண்ணும் செயல்முறை குறித்த பயிற்சியில் கலந்து கொண்டு, தேர்தல் நடத்தும் அலுவலர்கள் (Returning Officers), உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள்(Assistant Returning Officers), மாவட்ட கணினி நிரலாளர்கள்(District Programmers) மற்றும் உதவி கணினி நிரலாளர்கள்(Assistant Programmers) ஆகியோர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

### ‘இரட்டை என்ஜின்’ ஆட்சிகளில் ‘ஒற்றை இலக்க’ பொருளாதார வளர்ச்சி

## ‘ஒற்றை என்ஜின்’ ஆட்சியான ‘திராவிட மாடல்’ ஆட்சியில் ‘இரட்டை இலக்க’ பொருளாதார வளர்ச்சி!

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, மே. 1-

நிதி மேலாண்மையில் ‘இரட்டை என்ஜின்’ ஆட்சிகளில் ஒற்றை இலக்க வளர்ச்சி - ‘ஒற்றை என்ஜின்’ ஆட்சியான ‘திராவிட மாடல்’ ஆட்சியில் இரட்டை இலக்க வளர்ச்சி! வெறும் ஓட்டுக் கண்ணோட்டத்தோடு - குறுகிய நிலையில் பார்க்காமல், நாட்டு வளர்ச்சிக் கண்ணோட்டத்தோடு பார்த்தால், எவரும் வாழ்த்தியே ஆகவேண்டும்! ‘திராவிட மாடல்’ ஆட்சிக்கும் முதலமைச்சருக்கும் பாராட்டு கலந்த வாழ்த்துகள் என்று திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டு ‘திராவிட மாடல்’ ஆட்சிக்கும் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆளுமைத் திறமைக்கும், சொல்லால், எழுத்தால் அல்ல - செயலால் சாதித்து, வெற்றிக் கொடி நாட்டிடும் ஆட்சி என்பதற்கும் ‘பளிச்’சென்ற எடுத்துக்காட்டுக்கு அதன் பொருளாதாரத் துறை வளர்ச்சி! தமிழ்நாடு அரசின் சென்ற ஆண்டு பெருமிதத்திற்குரிய வளர்ச்சி விகிதம் 10.2% என்பதிலிருந்து 2025-2026 ஆம் நிதி யாண்டில், 10.83% வளர்ச்சி விகிதத்தினை எட்டியுள்ளது இனிப்பான செய்தியாகும்! திராவிட மாடலின் வெற்றிக்கு ஒரு கண்கூடான களம் ஆகும்!

நிதி மேலாண்மையில் எப்படி தனித்துவம் பெற்ற ஆட்சியாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களது ‘திராவிட மாடல்’ ஆட்சி ஒளிருகிறது என்பதற்கு, திட்டமிட்டு அனைவரையும் உள்ளடக்கிய இந்த வளர்ச்சியே (Inclusive Growth) உகந்ததோர் அளவுகோல் ஆகும்!



இந்தியாவின் தேசிய சராசரி வளர்ச்சி 7.4 சதவிகிதம் தான்! ‘ஒற்றை’ இலக்கத்துக்குள் அடக்கம். ‘இரட்டை என்ஜின் ஆட்சிகளால்தான் சாதனை செய்ய முடியும்’ என்று பிரதமர் மோடி முதல் அவரது ‘சுற்றுக்கிரகங்கள் வரை’ எசப்பாட்டுப் பாடுவது, வழக்கம்.

**‘திராவிட மாடல்’ ஆட்சியின் சாதனை சரித்திரம்!**

அதனைச் செயலில் முறியடித்து, ஒற்றை என்ஜின் ‘திராவிட மாடல்’ ஆட்சியில் சாதித்து, இந்திய நாட்டின் இரண்டாவது மாநிலமாக தமிழ்நாடு உயர்ந் துள்ளது என்பது, முதலமைச்சரின் ‘திராவிட மாடல்’ ஆட்சியின் சாதனைச் சரித்திரம்! அவ்வாட்சியின் ஆட்சிக் கிரீடத்தில் அமைந்துள்ள சிறப்பு ஒளிமுத்து அல்லவா?

நிதி மேலாண்மை, ஆளுமையின் ஒரு முக்கிய அம்சம்!

எப்படி இந்த இரட்டை இலக்கச் சாதனையை, ஒற்றை என்ஜின் அரசான ‘திராவிட மாடலால்’ சாதித்துக் காட்ட முடிந்தது என்பதை ஆராய்ந்தால், கல்வி மருத்துவம் போன்ற வாழ்வாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக உள்ள துறைகளுக்குச் செய்யப்படும் நிதி ஒதுக்கீடுகளை ‘‘செலவினம்’’ என்று கருதாமல், சமூக வளர்ச்சிக்கான ‘‘முதலீடு’’ என்று கருதிச் செலவிட்டும், சரியாகத் திட்டமிட்டும், பொருளாதார வல்லுநர்களின் வழிகாட்டும் நெறிமுறைகளையும் கலங்கரை விளக்காக்கி யும் ஆட்சி நடத்திய 5 ஆண்டு வளர்ச்சியின் வேகமும், வேலை வாய்ப்புக்கான தொழில் முதலீடு களை ஈர்த்து, தமிழ்நாட்டிற்கு அழைத்துக் கால்கோள் விழா நடத்தி, கடும் முயற்சிகளால் தமிழ்நாட்டின் தொழில் வரைபடம் முற்றாக மாறியுள்ளதன் வெளிச்சமுமே இது!

இதற்கு முன்பு ஆண்ட எடப்பாடியார் ஆட்சியில், இது எத்தனை சதவிகிதம்? வாங்கிய கடன், நிதி மேலாண்மையின் லட்சணம் இவற்றுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது ஒரு புறம். காலியான கஜானாவையும், கடன் உள்ள அரசையும் தானே தந்துவிட்டுப் போனது முந்தைய அ.தி.மு.க. ஆட்சி! அதைவிட முக்கியம் ‘இரட்டை என்ஜின்’ ஆட்சியின் சராசரி 7.4 சதவிகிதம்.

ஒற்றை என்ஜின் - அதுவும் பல நிதி மறுப்புத் தடங்கல்களையெல்லாம் தாண்டித்தான் இந்த இரட்டை இலக்க சாதனை! தெளிந்த பொருளாதார அறிவும், புரிதலும் உள்ள எவரும் இதற்காகத் தமிழ்நாடு ‘திராவிட மாடல்’ ஆட்சியைப் பாராட்டியே தீருவர்.

**தமிழ்நாடு - பெரியார் மண் - திராவிட உணர்வு நிலம்!**

தமிழ்நாடு ஜாதிக் கலவரம், “மதக் கலவரம் இல்லா அமைதிப் பூங்காவாக”த் திகழும் பெரியார் மண் - திராவிட உணர்வு நிலம் என்பது ஒரு முக்கிய அடிப்படைக் காரணமல்லவா?

இந்த ஒப்பற்ற சாதனைக்காக முதலமைச்சரைப் பாராட்ட மனமில்லாதவர்களும்கூட, தமிழ்நாட்டின் வளர்ச்சிக் கண்ணோட்டத்தோடு பார்த்தால், பாராட்டியே தீரவேண்டியவர்கள் ஆவார்கள். எவரும் வாழ்த்தியே ஆகவேண்டும்!

இதனை வெறும் ஓட்டுக் கண்ணோட்டத்தோடு - குறுகிய நிலையில் பார்க்காமல், நாட்டு வளர்ச்சிக் கண்ணோட்டத்தோடு பார்த்தால், வாழ்த்தியே ஆகவேண்டும் எவரும்! முதலமைச்சர் கூறியுள்ளது போல, “எண்ணற்ற சாதனைகளை எண்களாகவும் செய்து காட்டும் எடுத்துக்காட்டு ஆட்சியே ‘திராவிட மாடல்’ ஆட்சி” ஆகும். பாராட்டு கலந்த வாழ்த்துகள்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### திருவாரூர்- மன்னார்குடி- நன்னிலம்- திருத்துறைப்பூண்டி தொகுதிகளில்

## தேர்தல் பணியாற்றிய மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியினருக்கு நன்றி!

### மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் அறிக்கை!

திருவாரூர்,மே1.

தமிழ்நாட்டின் உரிமைகளை நிலைநிறுத்தி , மண்,மொழி,மானம் காக்கவும் , நாட்டின் வளர்ச்சி, பெண்களின் முன்னேற்றம் கல்வி மற்றும் சமூக நல்லிணக்கத்தைப் பாதுகாக்கவும் திராவிட நாயகர் தளபதி அவர்களில் கரத்தை வலுப்படுத்த உறுதுணையாக நின்று, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களின் வெற்றிக்காக அயராது தேர்தல் பணியாற்றிய அனைவருக்கும் திருவாரூர் மாவட்ட கழகச்செயலாளர் பூண்டி. கே. கலைவாணன், மாவட்ட தி.மு.கழகம் சார்பில் நன்றியைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தமது அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டில் நடைபெற்று முடிந்த 2026 சட்டமன்ற பொதுத்தேர்தலில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில், கழக தலைவர் தளபதி அவர்களால் அறிவிக்கப்பட்ட, திருவாரூர் சட்டமன்ற தொகுதியில் வெற்றி வேட்பாளராக போட்டியிட்ட எனக்கும் (பூண்டி. கே.கலைவாணன்), மன்னார்குடி சட்டமன்ற தொகுதியில் கழக வெற்றி வேட்பாளராக போட்டியிட்ட முனைவர் டி.ஆர்.பி. ராஜா அவர்களுக்கும்,



நன்னிலம் சட்டமன்ற தொகுதிக்கு போட்டியிட்ட எஸ்.டி.பி.ஐ. கட்சியின் வெற்றி வேட்பாளர் முகமது முபாரக் அவர்களுக்கும் , மூன்று தொகுதிகளிலும் வெற்றியின் சின்னமான உதயசூரியன் வெற்றிபெறவும், திருத்துறைப்பூண்டி சட்டமன்ற தொகுதியில் இந்திய கம்யூனிஸ்ட் சார்பில் வெற்றி வேட்பாளர் க. மாரிமுத்து அவர்களுக்கு கதிர் அரிவாள் சின்னமும் வெற்றிபெற்று கழகத்தின் தலைமையிலான திராவிட மாடல் 2.0. ஆட்சி மீண்டும் தொடர்ந்திட, அயராது தேர்தல் பணியாற்றிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்தல் களத்தில் தமிழ்நாட்டின் உரிமைகளை மீட்டெடுக்கவும், மண்,மொழி, மானம், காத்திடவும், நாட்டின் வளர்ச்சி, பெண்களின் முன்னேற்றம், கல்வி மற்றும் சமூக நல்லிணக்கத்தைப் பாதுகாக்கவும் திராவிட நாயகர் தளபதி அவர்களில் கரத்தை மேலும் வலுப்படுத்தவும் உறுதுணையாக நின்று, வெற்றி ஒன்றையே இலக்காகக் கொண்டு, பசி, தூக்கம் பாராமல் அயராது உழைத்த கழக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் கூட்டணி கட்சிகளின் அனைத்துப் பொறுப்பாளர்களுக்கும், தோழர்களுக்கும், பொதுமக்களுக்கும் எனது இதயப்பூர்வமான , நன்றியை திருவாரூர் மாவட்ட தி.மு. கழகத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட கழகச் செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## அரசுப் பள்ளி மாணவர் சேர்க்கை ஒரு லட்சத்தைக் கடந்தது!

சென்னை, மே.1-

தமிழ்நாட்டில் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 2026 27ஆம் கல்வி யாண்டுக்கான மாணவர் சேர்க்கை நடை பெற்று வரும் நிலையில், இதுவரையிலான மாணவர் சேர்க்கை எண்ணிக்கை ஒரு லட்சத்தைக் கடந்துள்ளதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.

துவக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் முதலாம் வகுப்பில் 97 ஆயிரத்து 737 மாணவர்களும், இரண்டாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை 8 ஆயிரத்து 178 மாணவர்களும், மழலையர் வகுப்புகளில் 6 ஆயிரத்து 796 மாணவர்களுமாக மொத்தம் 1 லட்சத்து 12 ஆயிரத்து 711 மாணவர்கள் இதுவரை சேர்க்கப்பட்டுள்ளனர். தமிழக பள்ளிக்கல்வித் துறையின் கீழ் 37 ஆயிரத்து 554 அரசுப் பள்ளிகள் இயங்கி வருவதுடன், சுமார் 52 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்து வருகின்றனர்.

கடந்த ஆண்டு 4 லட்சத்து 30 ஆயிரம் மாணவர்கள் புதிதாக சேர்க்கப்பட்ட நிலையில், இந்த ஆண்டு 5 லட்சம் மாணவர்களை சேர்ப்பதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டு பணிகள் தீவிரமாக முன்னெடுக்கப் பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.